

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) சென்னை கோபாலபுரத்தில் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமியின் இறுதி கட்டப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு நகரக் கழகச் செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார் தலைமையில் நடந்த மாபெரும் தி.மு.க. பொதுக் கூட்டத்தில் ஏழை–எளிய மக்கள் 2 ஆயிரம் பேருக்கு எரிவாயு அடுப்புகளை நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். இதில் நகராட்சி தலைவர் உமாபாய் சிவாஜி கணேசன், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், திருப்பத்தூர் எம்.எல்.ஏ. அ.நல்லதம்பி, மாவட்ட துணைச் செயலாளர் டி.கே.மோகன், சாந்தி சீனிவாசன், மாவட்டப் பொருளாளர் ஜோதி ராஜன், முத்தமிழ்ச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு!

சென்னை, பிப். 25 - தமிழ்நாடெங்கும் 1000 முதல்வர் மருந்தகங்கள் திறப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் 39 மாவட்டங்களில் முதல்கட்டமாக கூட்டுறவு சங்கத்தின் மூலம் 500 மருந்தகங்களும், தொழில் முனைவோர் மூலம் 500 மருந்தகங்களும் என மொத்தம் 1000 மருந்தகங்களை தமிழ்நாடு முதலமைச்சர் இன்று திறந்து வைத்துள்ளார். பிற மருந்தகங்களை ஒப்பிடும்போது முதல்வர் மருந்தகத்தில் மருந்துகளின் விலை 75 சதவிகிதம் வரை குறைந்த விலையில் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் ஏழை, எளிய மற்றும் நடுத்தர குடும்பத்தினரின் மருத்துவச் செலவிற்கான சுமை பெரிய அளவில் குறையும். அத்தோடு பி.பார்ம், டி.பார்ம் படித்துள்ள மாணவர்களும், தொழில்முனைவோர்களும் இந்த திட்டத்தில் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

இம்மருந்தகங்களில் உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் குறைந்த விலையில் கிடைப்பதை படிப்படியாக தமிழக அரசு உறுதி செய்திட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

மக்கள் நலனில் அக்கறை கொண்டு இந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா: பேரூர் செயலாளர் வி.டி.ஆர்.வி.எழிலரசன் தலைமை!

# அச்சிறுபாக்கம் பேரூர் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள்- பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. – கரூர் முரளி– க.செல்வம் எம்.பி. சிறப்புரை

காஞ்சிபுரம், பிப். 25, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் பேரூர் தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர், மக்களின் முதல்வர், கழகத்தின் தலைவர் முதலவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாவிழா மற்றும் இந்தியை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் மாபெரும் பொதுக் கூட்டம் 28.2.2025-வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு பேரூராட்சி எதிரில் அச்சிறுபாக்கத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பேரூர் கழகச் செயலாளர் வி.டி.ஆர்.வி. எழிலரசன் தலைமை வகிக்கிறார். பா.சிவசங்கரன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பா.சிவசங்கரன் வரவேற்றுப் பேசுகிறார்.

ஏ.சையத் முகமது, பி.ஆனந்தகண்ணன், கே.மீராகபாலி, பி.எம்.சுப்பிரமணி, ஏ.ஆர்.ஏழுமலை, கே.சித்தாத்தர், பி.வேலாயுதம், ஆர்.சீதாலட்சுமி, கே.சாகுல் அமீது என்கிற கனி, ஏ.டி.ஆர்.ரமேஷ், வி.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமைக் கழகப் பேச்சாளர் கரூர் முரளி, சிறுவேடல் க.செல்வம் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் கே.கண்ணன், டி.வி.கோகுலகண்ணன், எஸ்.உசேன், க.ந்தினி கரிகாலன், எஸ்.எம்.ஜியாவுதீன். து.சுரேஷ், அ.சக்கரியா, இரா.தருமன், ஏ.இ.ஆறுமுகம், க.பட்டாபி, உ.தாவூத்பீ உசேன், ப.ரவிக்குமார், ஆ.மோனிகா ஆனந்தகண்ணன், ஆ.பாஸ்கரன், வே.வெண்ணிலாவேல்முருகன், செ.அகிலா செல்வம், ம.சியாமளா மணிகண்டன், ஏ.அப்துல்மஜித், டி.கணேஷ்குமார், எஸ்.மஸ்தான், கே.அழகிரி, எம்.கஜேந் திரன், ஆர்.பார்த்தசாரதி, எஸ்.அசேன், ஆர்.ரகுபதி, ஆர்.தணிகாசலம், இ.ஷாஜகான், எம்.மோகன், வி.ஏழு மலை, கே.வரதராஜன், எம்.அருண்குமார், செ.அகிலா, எஸ்.முகமது முபாரக், ஆர்.கோகுல் குமார், எஸ்.காயத்ரி, கே.ரகுராமன், பி.புஷ்பராஜ், கே.வெற்றிசெல்வன், இ.லோகு, எம்.ராமு, டி.வீரப்பன், டி.நாகராஜன், கே.ராமலி ங்கம், ஆர்.ஆனந்தவேல், வி.மோகனகிருஷ்ணன், ஏ.சாகுல்அமீது, சு.கமல்குமார், தா.மணி, ஒய்.எஸ்.ஆர்.அப்பாஸ், க.சுப்பிரமணி, இரா.சூரியா, வே.வெண்ணிலா, வெ.கலைவாணி, க.மலா, ர.செல்வி, பி.ஜிவிதா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து – இன்று

# கழக மாணவர் அணி - இந்திய மாணவர்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பா. அருண்குமார் வேண்டுகோள்!

சென்னை, பிப்.25- மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா. அருண் குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தி.மு.கழகத் தலைவர் - முதலமைச்சர் மற்றும் தி.மு.கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக மாணவரணி செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் ஆணைக்கிணங்க ஒன்றிய பாஜக அரசை கண்டித்து அறவழி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

நீட் தேர்வு, க்யூட் தேர்வு, தேசியக் கல்விக் கொள்கை, யு.ஜி.சி. 2025 வரைவு விதி முறைகள் மூலம் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் மாநில உரிமைகளை சிதைக்கும் விதமாகவும், தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையை பறிக்கும் விதமாகவும் செயல்பட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தற்போது நம் உயிரிலும் உணர்விலும் கலந்துள்ள தாய்த் தமிழை அழித்து இந்தியை திணிக்க முற்படுகிறது.

தமிழ்நாட்டின் இருமொழிக்கொள்கைக்கு எதிராக சதிவலையைத் தீட்டி மும்மொழிக் கொள்கையை கட்டாயமாக்கும் வஞ்சக செயலை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறை வேற்றிட நினைக்கிறது.

இத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி மற்றும் இந்திய மாணவர்களின் கூட்டமைப்பு சார்பில் எனது தலைமையில் சைதை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் இருந்து ஊர்வலமாக நடந்து சென்று சைதாப்பேட்டை தபால் அலுவலகம் அருகே அறவழியில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

எனவே இவ் ஆர்பாட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், தமிழ் மாணவர் மன்றம் மற்றும் கல்லூரி மாணவர்கள் அனைவரும் இணைந்து பெருந்திரளாக பங்கேற்று பா.ஜ.க அரசுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்யுமாறு சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாணவர் அணி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமையில் நேற்று (24.02.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை வளாகக் கூட்டரங்கில் 2025–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத் துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள்/தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த் பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா: ஒன்றிய செயலாளர் ஏ.சிற்றரசு தலைமை!

# சித்தாமூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. – சேலம் சுஜாதா சிறப்புரை!

காஞ்சிபுரம், பிப். 25, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சித்தாமூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி, மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (25.2.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு சூனாம்பேடு பேருந்து நிலையம்அருகில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

சூனாம்பேடு ஆ.முரளி, சி.பி.இரவிக்குமார்ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர். தா.வரதராசன், க.நிர்மல் குமார், சு.ஜெயந்தி, சி.கே.ரமணய்யா, செ.அய்யப்பன், கி.குமரேசன், அ.விஜயன், பிரேமாசங்கர், சாந்திரவிக் குமார், ஜீவாபூலோகம், பாரதி காண்டீபன், மு.வசந்தராஜ், ஜெ.எஸ்.கண்ணன், மு.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் சிறுவேடல் க.செல்வம், ப.அப்துல் மாலிக், எஸ்.டி.இசை,ச.இனியரசு, ஆர்.டி.அரசு, வி.ஏழுமலை, டி.மோகன்தாஸ், சம்யுக்தா அய்யனார், எம்.குணசேகரன், பி.வி. புருஷோத்தமன், ஏ.என்.பாரத், கா.பால்ராஜ், பெரு கிருஷ்ணன், ஜி.தருமன், மு.கண்ணகி, க.பூபாலன், ஆர்.வள்ளரசு, கே.நாகராஜ், ஆர்.ஞானகுமார், பொன்.முருகாநந்தம், சாந்தாதினசேகரன், எம்.ஆர்.தனசேகர், அல்லிமுத்து, ஜெ.சதீஷ்குமார், கே.முத்து, கலைச்செல்வி ஜெகநாதன், டி. சாமிநாதன், பி.திருமலை, டி.சீனிவாசன், ஆர்.வினோதினி, கே.எஸ்.ஆதிகேசவலு, ஆ.கோ.பாண்டுரங்கன், க.மு.தனசேகர், எல்.எஸ். ரவீந்திரநாத், மு.ராமலிங்கம், எம்.வஞ்ஜிரவேலு, ஆர்.கிஷ்டப்பன், ஜி.விஷ்ணுவரதன், ஆர்.மூர்த்தி, ஜி.பரந்தாமன், ஜி..பல்லவதாஸ், இனியமதிகண்ணன், பி.கன்னி யப்பன், கே.எஸ்.ஜெயராமன், ஜி.வி. பெருமாள், வீ.விநாயகமூர்த்தி, த.சங்க ரலிங்கம், கே.எம். முருகதாசன், எஸ்.சரவணன், மு.பொன்முத்து ராமலிங்கம், சு.புஷ்ப லிங்கம், க.செங்கடேசன், அ.விக்னேஷ்வரன், மு.அமுதா, செ.தனம், தா.பொன்னியம்மாள், ஜெ.சாந்தி, சி.கௌசல்யா, எம்.உதயசங்கர், எம்.சந்தோஷ்குமார், பி.உஷா, விஜயலட்சுமி முத்தமிழ் பாக்கியநாதன், ஏ.ராஜசேகர, ஆ.ரவி, ரமணிரமணய்யா, மு.வடிவேல், குமுதாதுரைராஜ், தீபா முனுசாமி, அஞ்சாலை மாரிமுத்து, ந.பெருமாள், கலையரசி இருதயநாதன், மணிமேகலை மோகனசுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். அ.சோக்குமார், கு.ராஜேஷ், சே.பரத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மாபெரும் பொது மருத்துவ முகாம்! 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தனர்!

சென்னை,பிப்.25- சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், 17வது வட்டம் கொசப்பூர் பகுதியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி, 17 வது வட்டம் கொசப்பூர் சௌபாக்கியா நகர் பகுதி அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் ரெட்டேரி குமரன் மருத்துவமனை நடத்திய மாபெரும் மருத்துவ முகாம், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்றது.

300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட முகாமில் பொது மக்களுக்கு உயரம், எடை,ரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரை அளவு பரிசோதிக்கப்பட்டு மருத்துவர்கள் குழு பரிசோதனை செய்து, மருந்து மாத்திரைகளை இலவசமாக வழங்கினார்கள். இதய சிகிச்சை மருத்துவர்கள் இதய நோய் சம்பந்தமான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, இசிஜி இலவசமாக எடுக்கப்பட்டது. சுமார் 65 நபர்களுக்கு ஸ்ரீ குமரன் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் ரெட்டேரி குமரன் மருத்துவமனை சார்பில் இசிஜி பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மருந்து மாத்திரைகள் அனைத்தும் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இம் மாமிற்கு, வட்ட துணைச் செயலாளர் சி. பாலாஜி, பகுதி பிரதிநிதி சி. மூர்த்தி, மாதவரம் வடக்கு பகுதியில் இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என், அஜய் தென்னவன், பாகமுகவர்கள் டி. திவாகர், வி. சுமிர், ஜி. கார்த்திக், என். நாகராஜன், கே. சண்முகப் பிரியன், ஜி. பூபாலன், வினோத், நாகராஜ், ராஜ்குமார், சுதர், காந்திநகர் சுந்தரம், வழக்கறிஞர் எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் பி. குணசேகரன் மற்றும் மருத்துவர்கள் செய்திருந்தார்கள்.

துணை முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு இலவச மருத்துவ முகாமை ஏற்பாடு செய்ய உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகளுக்கும், பொது மக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் ந.கோபால் அறிக்கை!

காஞ்சிபுரம், பிப். 25 திருப்பெரும்புத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.கோபால் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருப்பெரும்புத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (26.2.2025 புதன்கிழமை) மாலை 3 மணி அளவில், திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

ஒன்றியக் கழக அவைத் தலைவர் ஏ.மோகனண் தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் வருகின்ற மார்ச் 1 ஆம் தேதி தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு பொதுக்கூட்டம் நடத்துவது குறித்தும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

எனவே மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ந.கோபால் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (24.02.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் சட்டமன்ற அறிவிப்புகளின் தற்போதைய நிலை, நேரடி நெல் கொள்முதல், கொள்முதல் செய்யப்படும் நெல்லினை தாமதிக்காமல் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வு செய்தல், பொதுவிநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ.சண்முகசுந்தரம், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.